கேரள சந்தனச் சோப்பை
வாங்குங்கள்.

ஒவ்வொரு கிராமத்திலும் வீட்டிலும் சுகத்தையும்
ஆனந்தத்தையும் அளிக்கும் சோப்பு இதுவே.

மிகவும் சிறந்த நறுமணம் பொருந்தியது

கோடையில் மிகுந்த குளிர்ச்சியையும், பரிமளத்தையும்
கொடுக்கும்
வெகு சிறந்த சோப்பும் இதுவே.

கேரளச் சோப்பு இன்ஸ்டியூட்,
தள்ளிக்கோட்டை.

உத்தம தோழன்.

மூத்திரசம்பந்தமான வியாதிகளால் அவதிப்பட்ட ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கு குணமென்னும் பாக்கியத்தைக் கொடுத்து பேரும் புகழும் பெற்ற உத்தம தோழன் யாதென்று உங்களுக்குத் தெரியுமா?

அதுவே எங்கள்

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

அஜீரணம், மலச்சிக்கல், நரம்புகளின் தளர்ச்சி, ஞாபகக் குறைவு, முதலிய வியாதிகளை சாஸ்தமாகக் கண்டிக்கும்.

[32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூபா 1.]

இனம்! "போஜன விதி" இனம்!!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, சென்னை.

TO LET

／# கிராமப் பஞ்சாயத்து.

மாகாண மாதாந்திரப் பத்திரிகை.

சம்புடம் II] 1931ஆு டிசம்பர் [இலக்கம் 3.

மிருக வைத்திய இலாகா யாதாஸ்து.

மதராஸ் கவர்ன்மெண்டின் மிருக வைத்திய இலாகாவின் 1930-31-ம் வருஷ யாதாஸ்து ஒன்று வரப் பெற்றோம். இந்த இலாகா செய்துவரும் வேலை நமது நாட்டுப்புற ஜனங்களுக்கு விசேஷ உபகாரமாயிருக்கவேண்டு மென்பதில் சந்தேகமில்லை. விவசாயிகளுக்கு நிலம் எருவுக்கு அடுத்தபடியாக அதியவசியமானவை கால் நடைகளேயாகும். கால் நடை சம்ரக்ஷணையை நன்கு விளக்கும் சாஸ்திரம் மிருக வைத்திய சாஸ்திரமேயாகும். அதிகார வர்க்கத்தின் ஆட்சியின் பலனாக ஏற்பட்ட இந்த இலாகாவின் நிர்வாகம் துரதிர்ஷ்ட வசமாக ரயத்துகளுக்கு ஏற்படக்கூடிய அனுகூலம் செய்து தரத்தக்கதாவில்லை யென்று நாம் சொல்லவேண்டியிருக்கிறது. இந்த இலாகா வேலையினால் சௌகரியமடையவேண்டிய சிரத்தை விவசாயிகளுக்கேற்படவேண்டுமானால் தாய் பாஷை மயமாக்கிப் பிரசாரம் நடத்த வேண்டியது இரண்டு இன்றியமையாத வேலையாகும். கவர்ன்மெண்டு இவ்வழிகளில் என்ன வேலை செய்திருக்கிறதென்பதை முதலில் கவனிப்போம்.

பிரசாரம் நடந்து வருவதாக இலாகா பெருமை பாராட்டிக்கொள்ளுகிறது. சுகாதார சிசு சம்ரக்ஷணை வாரக் காட்சிகளிலும், ஆடு மாடுச் சந்தைகள் கால் நடைக் காட்சிகளிலும் சென்று மிருக வியாதிகளைப்பற்றியும், அவற்றைச் சிகிச்சை செய்யும் முறைகளைப்பற்றியும் சில சமயங்களில் துண்டுப் பிரசுரங்கள் தாராளமாக வழங்கி வந்திருப்பதாகக் கூறப்படுகிறது. சில சமயங்களில் விவசாய இலாகாவின் மோடார் லாரிகளும் பிரசார நிமித்தம் உபயோகப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. இவைதான் பிரசாரமென்று சொல்லப்படுகிறது. கிராமாந்திரங்களில் பூதக்கண்ணாடித் திரைப் படங்கள் காட்டுவதற்காக இருநூறு இருநூற்றுக நான்கு ஜதைப் படங்கள் கைவசமிருக்கின்றனவாம். இவற்றைத் தவிர பிரஸ்தாப வருஷத்தில் தயாரான ஸ்லைடுகளும், நாமதேயங்களும் 241 என்றும் அச்சிடப்பட்ட விஷயங்கள் நூறு என்றும் தெரிகிறது. இவ்விஷயககளைக் கணக்குப்பண்ணிக்

கூறுவதிலிருந்தே பிரசாரத்திற் கவசியமான சாமக்கிரியைகள் மிகவும் சொற்பமா யிருக்கின்றனவென்பது விளங்கும். ஒரு ஜில்லாவிற்கு ஒரு அடுக்குக் கண்ணாடிப்படங்கள்கூட யில்லையென்பது இதிலிருந்து ஏற்படுகிறது. தவிர அப்படங்கள் எம்மாதிரியோ, விவசாயிகளின் அறியாமையோ மிகவும் அதிகமாயிருக்கிறது. மூட நம்பிக்கை உடன்பிறந்ததா யிருக்கிறது. மிருக நோய் தீராப்பிணியாயிருப்பதனால் வருஷா வருஷம் இறக்கும் ஜெந்துக்களின் தொகை ஆயிரக் கணக்காகக் கணக்கிடப்படுகிறது. நோய் தவிர்க்கச்செய்யும் சிகிச்சைகளை ரயத்துகள் சில சமயங்களில் அனுஷ்டிக்க மறுக்கிறார்களாம். அம்மை குத்துவது போன்ற சாமானிய சிகிச்சைக்கும் எதிர்ப்பிருப்பதாகத் தெரிகிறது. இவ்விஷயமாக அதித் தீவிர வேலை அதிகம் செய்யவேண்டியது அவசியமாகிறது. அவ்விதம் செய்வதிலும் உபயோகப்படும் முறைகளை யனுஷ்டிக்கவேண்டியதாகிறது. அபிவிருத்தி இலாகா வேலைப் பிரசார நிமித்தம் உத்தியோகப் பற்றற்றவர் அடங்கிய ஒரு பிரசார போர்டைக் கவர்ன்மெண்டு ஏற்படுத்துவது நலமாகும்; இந்த போர்டார் மிருக வைத்தியம், விவசாயம், சுகாதாரம் முதலிய விஷயங்களையும் அந்தந்த இலாகாவின் உதவியைக்கொண்டு பிரசாரம் நடத்தி அவற்றினால் நடைபெறும் வேலைகளுக்கு ஆதரவு தேடிக் கொள்ளலாம்.

எவ்வித முயற்சியையும் தாய்ப் பாஷையில் விளக்கப்படுத்தவேண்டுமென்ற நோக்கம் கவர்ன்மெண்டிற்கு இதுவரையில் கிடையாது. சிற்சில துண்டுப் பிரசுரங்கள் எப்பொழுதேனும் தாய்ப்பாஷையில் அச்சிடப்பட்டு ஜனங்களுக்கு வழங்கப்பட்டு வருவது உண்மையே. ஆனால், கால்நடை வியாதிகள், பயிர் நோய்கள், நாச பூச்சி உபத்திரவங்கள் போன்ற முக்கியமான விஷயங்களை சாஸ்திரோக்தமாக விளக்கி, வியாக்கியானம் செய்து சிறு புஸ்தகங்களாக அச்சிட்டு வழங்கப்பட்டதில்லை. ஆரம்பக் கல்விப் பள்ளிக்கூடங்களில் விவசாயப் படிப்பைப் போதிக்கப் பிரயாசை வெகு காலம் நடந்துவந்திருக்கிறது. ஆனால், அதனால் ஏற்பட்ட பலனோ கவைக்குதவவில்லை. மிருக வைத்திய சாஸ்திரஞானமோ இதர அபிவிருத்திக்கான விஷய ஞானமோ நமது விவசாயிகளுக்கு அதி பால்ய முதல் தாய்ப்பாஷையில் போதிக்கப்பட்டாலல்லது அதிக வியாபகமாகமாட்டா. இந்த ஞானம் பாவவேண்டுமானால் மிருக வைத்திய கலாசாலை மூலமும் இதர வழிகளிலும் இந்த இலாகா செய்யும் வேலையை தாய்ப்பாஷையில் தெரிந்துகொள்ளுமாறு செய்யவேண்டும். இரட்டையாட்சியில் இந்த வேலை சாத்தியமாகுமாவென்பது சந்தேகம். இருந்தாலும், நம் நாட்டில் மாகாண சுய ஆட்சியும் வரி நிர்ணய சுதந்திரமும் சீக்கிரமே கட்டாயமாக ஏற்படப்போகிறதென்று வாக்களிக்கப்பட்டிருக்கின்றமையால், மேற்கூறப்பட்ட வழியில் வேலை நடத்தத் தேவையான பூர்வாங்க ஏற்பாடுகளை ஆரம்பிக்கலாம்.

மிருக வைத்திய இலாகா யாதாஸ்து.

கால் நடைகளுக்குப் பல வருஷங்களாகத் தொத்து நோய் அதிகக் கடுமையாகவிருந்துவந்திருக்கிறது. நல்லகாலமாக 1930-31-ல் மரண விகிதம் குறைந்திருக்கிறது. முந்திய வருஷங்களில் 158,523 மரணங்கள், நேர்ந்திருக்கின்றன; 1930-31-லோ மரணத்தொகை 99,890. சென்ற இரண்டு வருஷங்களாக ஏற்பட்டுவந்த மரணங்களைவிட பிரஸ்தாப வருஷம் கால்நடைகள் சேதமடைந்திருப்பது மிகவும் குறைவாயிருக்கிறதென்ற சந்தோஷம் ஒருபக்கமிருக்க, சிற்சில ஜில்லாக்களில் மாத்திரம் மரணம் கேழ்க்கச் சகிக்காமலிருப்பது கவனிக்கத்தக்கது. இவ்விதம் இறக்க நேர்ந்த ஜந்துக்களில் பாதிக்குமேல் காணைநோய் பீடிக்கப்பட்டவை. குண்டூர், வடஆற்காடு, கிருஷ்ணை, தஞ்சாவூர், மலையாளம், கர்னூல், கஞ்சம் முதலிய ஜில்லாக்களில்தான் இக்கொடிய நோய் அதிவியாபகமாயிருந்திருக்கிறது. குண்டூர் ஜில்லாவில் மாத்திரம் 9,405 மிருகங்கள் இந்நோய்க் கிரையாகிவிட்டன. நோயைத்தடுக்க அம்மைகுத்தும் வேலை வெகு மும்முரமாக நடந்திருக்கிறது; இருந்தாலும் இறந்துபோன ஜந்துக்களின் தொகையை கவனிக்குமிடத்து தேவைக்கவசியமான வசதிகள் செய்யப்படவில்லையென்றே தோன்றுகிறது. அம்மைப்பாலை ஒரே சமயத்தில் உள் செலுத்துவதென்ற முறைப்பிரகாரம் இவ்வருஷத்தில் 1,47,880 மாடுகளுக்குத்தான் வைத்தியம் செய்யப்பட்டிருக்கிறது. சென்ற வருஷத்திலோ 1,69,896 கால்நடைகள் கையாளப்பட்டிருக்கின்றன. அம்மைப்பால் மாத்திரம் குத்தப்படும் முறையில் 1,136 கால்நடைகள்தான் சிகிச்சை பெற்றிருக்கின்றன. முந்தியவருஷத்திலோ இம்முறைப்படி 13,224-க்கு அம்மை குத்தப்பட்டிருக்கிறது. இந்தக்குறைவிற்குக் காரணம் நோய்வாய்ப்பட்ட பிராணிகள் தொகை குறைவாயிருந்ததனாலும் முக்தேசரவிருந்து அம்மைப்பால் 5 மாதங்களாகச் சரிவரக் கிடைக்காததினாலும் என்று கூறப்படுகிறது. வியாதி தோன்றியதும், தகவலறிவிப்பதிலும் தாமதம் ஏற்பட்டிருப்பதாகத் தோன்றுகிறது. கிராம அதிகாரிகள் காலாகாலத்தில் தகவலறிவிக்கவில்லையென்று 86 கிராமங்கள்மீது மிருகவைத்திய இலாகா அதிகாரிகள் புகார் செய்திருக்கின்றனர். கால் நடைகளின் நோய் சம்பந்தமான தகவல் மாத்திரமல்லாது, கிராமவாழ்க்கைச் சம்பந்தப்பட்ட இதர முக்கிய தகவல்களையும் உடனுக்குடனேத் திறமையுடன் அறிவிக்கத்தகுந்த ஸ்தாபனம் கிராமப் பஞ்சாயத்து ஒன்றுதான் என்பது நமது அபிப்பிராயம். இந்த ஸ்தாபனத்தை எங்கு பார்த்தாலும் ஏற்படுத்தவேண்டியதவசியமாகும். முக்தேசரவிருந்து அம்மைப்பால் கிடைப்பதில் தாமதமேற்பட்டதென்று ஒரு காரணமும் கூறப்பட்டது. நம் கவர்ன்மெண்டார் இந்த மருந்தை உள்ளூரிலேயே தயாரிக்கவேண்டுமென்று வெகுகாலமாகப் பிரயத்தனம் செய்துகொண்டிருக்கிறார்கள். குளிர், உஷ்ணகாலம் இரண்டு காலங்களிலும் அம்மைப்பால் தயாரிப்பதினால் அப்பாலின் சக்தி குறையவில்லையென்று மதராஸ் மிருகவைத்திய கலாசாலையில் ஆராய்ச்சிசெய்து

முடிவு கூறியிருந்தும், அம்மருந்தை இங்கேயே தயார்செய்ய கவர்ன் மெண்டு அனுமதியளிக்க முன்வரவில்லை.

நம் நாட்டில் விசேஷமாகப் பயிராகும் பூண்டு பச்சை இலை முதலிய வற்றைச் சாத்யமானவரையில் உபயோகித்து மிருகவைத்தியம் செய்ய நடந்துவரும் முயற்சியைக் காணத் திருப்தி ஏற்படுகிறது. நாட்டு மூலி கைகளை நல்ல ஔஷதமாக உபயோகிக்கும் வழிகளை சாஸ்திரோக்தமாக ஆராய்ச்சி செய்யவேண்டும் சிரத்தை ஏற்பட்டிருக்கிறது. விவசாய ஆராய்ச்சியின் மத்திய சபையும் இதற்கானச் செலவிற்குத் தயாராயிருப்ப துடன், வைத்திய இலாகாவுடன் சேர்ந்து இதற்கானத் தகவல்களைச் சேக ரித்து ஆராய்ச்சி நடத்த ஒரு அதிகாரியை நியமிக்கவேண்டுமென்று இம் மாகாண கவர்ன்மெண்டு கூறியுள்ள யோஜனையையும் ஏற்றுக்கொண்டிருக் கிறது.

பத்திராதிபரின் குறிப்புகள்.

பஞ்சாயத்து தேர்தல்கள்

1930-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 25-ம் தேதியன்று யூனியன் போர்டுகளாக வில்லாத பஞ்சாயத்துகளின் நகல் விதிகள் 1931-ம் வருஷம் டிசம்பர்மாதம் முதல்தேதி வெளிவந்துள்ள போர்ட் ஸெண்ட் ஜார்ஜ் கெஜட்டில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. வோட்டுக் காகிதங்கள் மூலம் இரகசியமாக வோட்டு செய்ய வழியில்லை. வாக்காளர்களைக் கூட்டமாகக்கூட்டிக் கைகளைத்தூக்கித் தங்கள் சம்மதத்தைத் தெரிவிப்பதென்ற பழைய வழக்கம் இன்னும் அனுஷ்டானத்திலிருக்கும். தாலுக்கா போர்டு ஜாப்தா வில் காணப்படும் வாக்காளர்கள்தான் இங்கும் வோட்டர்களாயிருப்பார்கள். தேர தல் கூட்டத்தில் முன்போல் தாசில்தார் போய் அக்கிராசனம் வகிக்கமாட்டார். லோகல் போர்டுகள் இன்ஸ்பெக்டரால் நியமிக்கப்படும் ஒருவர்தான் அந்தக் கிராமங் களுக்குச் சென்று தேர்தலை நடத்துவார். இவருக்குத் தேர்தல் அதிகாரிகளுக் குள்ள சர்வ அதிகாரமுமிருக்கும். கிராமாந்திரங்களில் இவ்விதம் இருப்பது சௌகர்யமாயிருக்குமென்பதில் சந்தேகமில்லை. இருந்தாலும் ஒரே ஒருவித ஆபத்து மாத்திரம் நேராமல் பாதுகாக்கவேண்டிய தவசியமாகிறது. தேர்தலை நடத்தும் அதிகாரியே பிற்பாடு அந்தப் பஞ்சாயத்தைப் பார்வையிடும் மேலதிகாரியாகவிருக்க நேரிடுமேயாகில் பலவித ஊழல்களுக்கிட மேற்பட்டுவிடும். வனப்பஞ்சாயத்துகள் விஷயமாக இத்தகைய புகார்கள் இருந்துவருகின்றன. லோகல்போர்டுச் சட்டப் பிரகாரம் ஏற்படும் பஞ்சாயத்துகள் பல வழிகளில் அனேக மேலதிகாரிகளின் பார் வைக்குட்பட்டு வருமாகையால் நாம் கூறிய ஊழல்கள் அதிகமாக ஏற்படாமல் கொஞ்சம் ஹத்திலிருக்கக்கூடும். அதாவது, வோட்டர்கள் ஜாபிதா ஏற்கனவே தயாராக விருப்பதுடன் தாலுக்கா ஜில்லா போர்டுகளும் பஞ்சாயத்துகளை மேற் பார்வையிட்டுவரும். இருந்தாலும், பொதுஜன ஆதரவைக்கொண்டு நடத்தப்படும் ஸ்தாபனங்களின் தேர்தல் அதே ஸ்தாபனத்தின் மேலதிகாரியாக விளங்கும்

எவரைக்கொண்டும் நடத்தப்படக்கூடாது என்பதை நாம் வற்புறுத்த விரும்புகிறோம். மேற்பார்வை யதிகாரமில்லாத எவரேனுமே தேர்தலதிகாரியாக விருக்குமாறு ஸ்தலஸ்தாபன இன்ஸ்பெக்டர் கவனித்துக்கொள்வாரென்று நாம் நம்புகிறோம். இந்த விதிகளை நிர்வாகிகளிஷ்டப்பிரகாரம் விட்டுவிடாமல் கவர்ன்மெண்டு தாமே அமுல் நடத்தவேண்டுமென்பது நமது கோரிக்கை.

லோகல் போர்டுகளின் கணக்குகள்.

எல்லா லோகல் போர்டுகளும் எவ்வகையாகக் கணக்குகள் எழுதி வரவேண்டுமென்று குறிப்பிடும் விதிகள் கவர்ன்மெண்டினால் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. அங்கு வைத்துக்கொள்ளவேண்டிய ரெஜிஸ்தர்களின் பெரிய ஜாபிதாவைப் பார்க்குமளவிலேயே எந்தப் பஞ்சாயத்திற்கும் நடுக்கம் எடுத்துவிடும்போலிருக்கிறது. பஞ்சாயத்துகளுக்கேற்ற வழியில் சுலபமாகக் கணக்கு எழுதி வைக்கத் தக்க யோசனையைக் கவர்ன்மெண்டார் செய்வாரென்று நாம் நம்பியிருந்தோம். பஞ்சாயத்துக் கணக்குகளைச் சுருக்கமாக எழுத வழிகளை யோசித்தறிய ஒரு ஸ்பெஷல் அதிகாரிகூட நியமிக்கப்பட்டதாக ஞாபகமிருக்கிறது. அந்த அதிகாரி செய்த வேலை யென்னவாயிற்றோ தெரியவில்லை. கவர்ன்மெண்டின் உத்திரவில் குறிக்கப்பட்டுள்ள எல்லா கணக்குகளையும், புஸ்தகங்களையும் பஞ்சாயத்துள்பட எல்லா ஸ்தல ஸ்தாபனங்களும் எழுதி வைக்கவேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறதைத்தான் இப்பொழுது நாம் பிரத்தியக்ஷமாகத் தெரிந்துகொள்ளுகிறோம். இவ்விதக் கணக்குகளை எழுதிவைக்க ஏற்படும் சிரமம், பஞ்சாயத்துகளால் அதற்கான பணம் செலவிட முடியுமாவென்னும் விஷயங்கள் யோசிக்கப்பட்டிருப்பதாகத் தோன்றவில்லை. இவ்விஷயங்களைக் கவர்ன்மெண்டு கவனித்து பஞ்சாயத்துக் கணக்குகளைச் சுருக்குவதற்கான ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று எதிர்பார்க்கிறோம். சின்ன பஞ்சாயத்துகளில் ரொக்கக் கணக்கு, பேரேடு, ரசீது புஸ்தகம், விதிக்கப்படும் வரிப்புஸ்தகம், வசூல் புஸ்தகம் முதலியன இருந்தால் சாதாரணமாக போதும். நாளாபிவிருத்தியில் மேற்பார்வையிடும் அதிகாரிக்கு அவசியமென்று தோன்றும் புஸ்தகங்களையும் கணக்குகளையும் சேர்த்துக்கொண்டே போகலாம். அச்சிடப்பட்டிருக்கும் காகிதங்களும் (பாரங்கள்) கணக்குப் புஸ்தகங்கள் யாவும் கவர்ன்மெண்டினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள அச்சுக்கூடங்களில் தான் வாங்கப்படவேண்டுமென்று வற்புறுத்துவதிலிருந்து மாமூல் விஷயங்களிலும் அனுவசிய அதிகாரம் காட்டுவதாகிறது. கிராமத்திலுள்ள புத்திசாலியான எந்த குமாஸ்தாவும் மாதிரி பாரத்தைக்கொண்டு தேவையான பாரங்கள் தயாரிக்கக் கூடும். கிராமாந்திரங்களில் கர்ணங்கள் பெரும்பாலும் இவ்விதமே செய்து வருகிறார்கள். அச்சிட்ட மாதிரி எங்கும் ஒரே ஒழுங்கு இருக்கவேண்டுமென்ற ஆசைக்காக ஸ்தல ஸ்தாபன சுய ஆட்சி நிர்வாகச் செலவை அதிகப்படுத்திவிடக்கூடாது.

ஜில்லா பஞ்சாயத்து அதிகாரி.

லோகல் போர்டுச் சட்டம் அமுலுக்குவந்து 16 மாதங்களாகிவிட்டன. ஸ்தல ஸ்தாபனங்களின் வாக்காளர் ஜாபிதாவும், அனேகமாகத் தயாராகிவிட்டன. ஜில்லாப் பஞ்சாயத்ததிகாரி எங்கும் நியமிக்கப்படவேண்டும் என்னும் பேச்சே இன்னும் ஏற்படவில்லை. ஏதோ இரண்டொரு ஜில்லாக்களில் இப்பொழுதே பஞ்சாயத்ததிகாரிகள் நியமிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இதர ஜில்லாக்களில் இந்த யோஜனையே பிரஸ்

தாபத்திலில்லே. இந்த அதிகாரியின் சம்பளம் முதலியவற்றைக் கவர்ன்மெண்டே கொடுப்பதென்ற உத்தேசம் முதலிலிருந்தது. இப்பொழுது அந்த எண்ணம் கைவிடப்பட்டுவிட்டது. ஜில்லா போர்டுகளோ இச்செலவை மேற்போட்டுக் கொள்ள இஷ்டப்படாமல் சிலவும், முடியாமல் செலவுமிருக்கின்றன. இவ்விஷயமாக ஏற்படும் செலவோ ஒரு லக்ஷரூபாய்க் கதிகமாகாது. முதலில் இந்தச் செலவிற்குத் தயாராயிருந்த கவர்ன்மெண்டு இப்பொழுது பின்வாங்கவேண்டியகாரணம் விளங்கவில்லே. லோகல் போர்டு சட்டம் 1930-ல் நிறைவேறிற்று. ஸ்தலஸ்தாபன சுயஆட்சி வியாபகமாவதற்காக கூடிய சீக்கிரத்தில் பஞ்சாயத்துகளே ஏற்படுத்தவேண்டுமென்பது இச்சட்டத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்று. பஞ்சாயத்து அதிகாரி என்பவர் மாகாணமுழுவதும் பஞ்சாயத்துகளே ஏற்படுத்தி அது நன்ருகவே முன்புப்பிரசாரம் செய்யவேண்டுமென்று உத்தேசிக்கப்பட்டது. இதிலிருந்து பஞ்சாயத்துகளேத் தருமஸ்தாபனங்களேப் போல பரிபாலிக்கும் பொறுப்பு ஜனங்களால் கவர்ன்மெண்டிடம் விடப்பட்டிருக்கிறதென்பது ஏற்படுகிறது. நடப்பதென்னவென்ருலோ, பஞ்சாயத்து அதிகாரிகள் எங்கும் சகஜமாக நியமிக்கப்படாமலிருப்பதுடன் முதல்தரமான கனவான்களேக் கௌரவஸ்தாபகர்களாக ஏற்படுத்தும் வழக்கமும் விருத்திக்குவரவில்லே. தேசத்தில் ராஜ்யவிஷயமாகத் தோன்றியுள்ள தடமாற்றத்தினுல் இந்த வேலேத் தடைப்பட்டிருக்கிறதென்பது உண்மை. இருந்தாலும் ஸ்தலஸ்தாபனச் சட்டத்தில் பஞ்சாயத்தையும் புகுத்திருப்பதனுல் இந்த இயக்கத்திற்கும் பாதிக்கப்படுவதாகத் தோன்றுகிறது. இப்பொழுதேற்பட்டுள்ள நிலேமையைக் கவர்ன்மெண்டு நன்கு ஊன்றித் தெரிந்துகொண்டு தாங்கள் செய்யவேண்டிய கடமையை அதிகச் சிரத்தையாகவும் துரிதமாகவும் செய்யவேண்டுமென்று ஆவலுறுகிருேம்.

விவசாய இலாகாவின் யாதாஸ்து. சென்னே மாகாண விவசாய இலாகாவின் 1930-1931-ம் வருஷத்தில் செய்துள்ள வேலே விவரங்களடங்கிய யாதாஸ்து ஒன்று நமக்குக் கிடைத்திருக்கிறது. இதைப் பற்றிய அபிப்பிராயம் அடுத்த சஞ்சிகையில் எழுத உத்தேசித்திருக்கிருேம்.

லோகல் போர்டுகள் குத்தகை விஷயம்.

நகல் விதிகள்.

ஸ்தல ஸ்தாபனச் சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள அதிகாரத்தைக்கொண்டு கவர்ன்மெண்டு பின் வரும் விதிகளேத் தயாரித்திருக்கிறது. லோகல் போர்டுகள் வேலே குத்தகை விடும் விஷயமாக அனுஷ்டிக்கப்படவேண்டிய நிபந்தனேகள் இவ் விதியில் கூறப்பட்டிருக்கின்றன. இவை முடிவாக அங்கீகாரத்திற்கு வருமுன்னர், மாறுதல்கள் கூற விரும்புபவர்கள் 1931-ம் வருஷம் நவம்பர் மாதம் 17உ முதல் 6 வாரங்களுக்குள் தங்கள் யோசனேகளேத் தெரிவித்துக்கொள்ளலாம்.

விதிகள் விவரம் வருமாறு :—

I. (a) ஷெட்யூல் குத்தகை.—ஷெட்யூலில் விதிக்கப்படும் விகிதப் பிரகாரம் பணம் பெற்றுக் குறிப்பிட்ட தேதிக்குள் ஒரு வேலேயைச் செய்து முடிக்குமாறு விடுவதற்கு ஷெட்யூல் காண்ட்ராக்ட் என்று

பெயர். இந்த விதியின் பிரகாரம் வேலை செய்ய மூன் வருப வருக்கு அவர் செய்து முடித்துள்ள வேலையின் அளவு, ரீதி, அவ் வேலைக்கு உபயோகித்துள்ள தளவாடங்கள் ஆகியவற்றின் மதிப் பைக்கொண்டு, கொடுக்கப்படவேண்டிய தொகை நிர்ணயிக்கப் படும். இவ்விதமாக நிர்ணயிக்கப்படும் தொகை, அந்த வேலை பூரா விற்கும் மொத்தமாக அனுமதிக்கப்பட்டுள்ள தொகையளவிற் கதிகப்படக்கூடாது.

(b) மொத்த வேலைக் குத்தகை.—குறிப்பிடப்படும் ஒரு வேலையைத் தயாராயிருக்கும் திட்டப்பிரகாரம் செய்து முடிக்கக் குத்தகை யாக எவ்வளவு தொகையென்று கண்டிராக்டரால் ஒப்புக்கொள் ளப்படுகிறதோ, அந்த ஏற்பாட்டின் பிரகாரம் விடப்படும் குத்த கைக்கு மொத்தத்தொகைக் குத்தகை (லம்ப் ஸம் காண்ட்ராக்ட்) என்று பெயர்.

II. வேலையைச் சரிவரச் செய்து முடிப்பதற்கு உத்தரவாதமாக ஒவ்வொரு கண்ட்ராக்டரும் ஜாமீனாக முன் பணம் கட்டவேண்டியதவசியம். இவர்கள் செய்த வேலைக்குப் பணம் கொடுக்கும்பொழுதும் இந்த ஜாமீன் தொகையை வைத்துக்கொண்டுதான் பாக்கிப் பணம் கொடுக்கப்படும். ஜாமீனாகக் கொடுக்கப்படும் ஈடு பின் வருமா றிருக்கலாம்.

(a) ரொக்கமாக ரூ 50 கட்டப்படலாம். அல்லது ஏற்கெனவே முன் பணமாக கட்டப்பட்டிருக்கும் தொகை இதற்கு அதிகமாயிருந் திருப்பின் அந்தத் தொகைப் பூராவும் ரொக்க ஜாமீனாக வைத் துக்கொள்ளப்படும்.

(b) மேற்சொன்னவாறு இல்லாவிடில், கவர்ன்மெண்டு கடன் பத்திரங் கள், முனிசிபல் அடமானப் பத்திரங்கள், போர்ட்டு டிரஸ்டு பாண்டுகள், சரிவரக் கணக்குகள் பிரசுரித்து வரும் கவர்ன்மெண் டினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள பாங்கிகளில் செலுத்தியுள்ள டெபாசிட் ரசீதுகள், ஆகிய எதையேனும் கோரப்படும் தொகை யளவு மதிப்பிருந்தால் ஜாமீனாகக் கொடுக்கலாம்; அல்லது

(c) ஜாமீன் கோரப்படும் தொகையளவு மதிப்புள்ள தபாலாபீஸ் காஷ் ஸர்டிபிகேட்டுகளையும் ஜாமீனாகக் கட்டலாம்.

வியாக்யானம்:—கண்டிராக்டரால் கட்டப்பட்டுள்ள முன் பணம் யாதேனும் இருந்தால் அத்தொகையை ஜாமீன் தொகையாக வரவு வைத்துக்கொள்ளலாம்.

III. (1) லோகல் போர்டினாலோ அல்லது அதன் சார்பாகவோ ஏற்கப்படும் குத்தகை யாவும் எழுத்து மூலம் அங்கீகரிக்கப்படவேண்டும்; ஆனால் ரூ. 250-க்கு அதிகப்படாத சில்லரை வேலைக் குத்த கையை ஜில்லாபோர்டு எஞ்சினீயரே எழுத்துமூலம் அனுமதிக் கலாம்.

(2) எழுத்துமூலம் ஏற்படும் குத்தகைப்பத்திரங்களில்

(*a*) கண்டிராக்டரும்.

(*b*) லோகல்போர்டு சார்பாக அந்த போர்டுத் தலைவரோ அல்லது எஞ்சினீயரோ இருவரில் ஒருவரும் கையெழுத்திடவேண்டும்.

i. எஞ்சினீயர் அதிகாரத்திற்குட்பட்டக் குத்தகை யல்லது டெண்டர்கள் அங்கீகாரத்தில் ஜில்லாபோர்டு எஞ்சினீயர் கையெழுத்திடவேண்டும்.

ii. இதர குத்தகைப் பத்திரங்களில்—

(*a*) லோகல் போர்டு தலைவரோ அல்லது

(*b*) கையெழுத்திட போர்டினால் அதிகாரமளிக்கப் பட்டிருக்கும் ஜில்லா போர்டு எஞ்சினீயரோ அந்த போர்டு விதித்துள்ள நிபந்தனைகளுக் குட்பட்டு கையெழுத்திடவேண்டும்.

IV. (1) குத்தகைப் பத்திரங்களின் விஷயங்கள் சரியாகத் தெளிவுபடுத்தி எழுதப்படவேண்டும். அவற்றில் பின்வரும் சமாசாரங்கள் குறிப் பிடப்படவேண்டும்.

(*a*) செய்யப்படவேண்டிய வேலை விதம், அளவு.

(*b*) வேலை நிர்மாணங்கள், அமைப்பு விவரங்கள் (ஸ்பெஸிபிக் சேஷன்).

(*c*) வேலைப் பூர்த்தியாகவேண்டிய கெடுவு.

(*d*) ஒப்பந்தங்கள், நிபந்தனைகள்.

(*e*) கட்டவேண்டிய ஜாமீன் தொகை.

(*f*) பணம் கொடுக்கப்படுவதைப்பற்றிய நிபந்தனைகள்.

(*g*) தப்பேற்பட்டால் செலுத்தவேண்டிய நஷ்ட ஈடு விவரம்.

(*h*) கண்டிராக்டரிடம் ஒப்படைக்கப்படும் சொத்தின் காபந் திற்கவசியமான நிபந்தனைகள்.

(2) அவசியமான விடங்களில் இந்த காண்டிராக்டு பத்திரங்களுடன், செய்ய வேண்டிய வேலையின் படம் (ட்ராயிங்), விஸ்தீரணமுதலிய வடங்கிய குறிப்புகளுடன் சேர்க்கப்படவேண்டும்.

V. (1) மாகாண கவர்ன்மெண்டினால் அந்தந்த சமயங்களில் விதிக்கப்படும் விவரங்களை அச்சிட்டுள்ள காகிதங்களில், வேலைக்கேற்றவாறுக் குத்தகை உடன்பாடு எழுதப்படவேண்டும்.

(2) இவ்விதம் ஏற்பட்ட அச்சுக்காகிதம் கிடையாத சந்தர்ப்பங்களில் குத்தகை உடன்பாடுப்பத்திரம் ஒரு தகுந்த வக்கீலின் யோசனை யைக்கொண்டு வரையப்படவேண்டும்.

லோகல் போர்டுகள் குத்தகை விஷயம்.

VI. ஒருமுறை எழுதி ஒப்புக்கொள்ளப்பட்டக் குத்தகை நிபந்தனைகளில் மாறுதல் எதுவும், அந்தப்பத்திரத்தில் கையெழுத்திட யோக்யதையுள்ளவர்கள் சம்மதமன்னியில், செய்யப்படக்கூடாது. தக்கவர் சம்மதம் பெற்று மாறுதல் யாதேனும் ஏற்பட்டால் அம்மாறுதலின் அங்கீகாரமாக, சரியான வழியில் இருதரத்தினரும் கையெழுத்திடபடவேண்டும்.

VII. மேற்கூறப்பட்டுள்ள விதிகளுக்குப் புறம்பாகச் செய்துகொள்ளப்படும் எவ்விதக் குத்தகையுமோ, குத்தகை ஏற்பாடு மாறுதல்களோ, கையெழுத்துப் பத்திரங்களோ லோகல்போர்டுகளைக் கட்டுப்படுத்தமாட்டா.

லோகல் போர்டுக் கணக்குகள்.

ஸ்தல ஸ்தாபனங்களில் கணக்கு விவரங்கள் எழுதிவைப்பதைக் குறிக்கும் விதிகளின் நகல் இங்கு பிரசுரிக்கப்படுகிறது. இதற்கு ஆட்சேபனை மாறுதல்கள் சொல்ல 1931 நவம்பர் 17-ம் தேதி முதல் 6 வாரம் சாவகாசமளிக்கப்பட்டிருக்கிறது.

I. 1. பின் குறிப்பிடப்படப்படும் வழியில் கணக்குகளும் கணக்குப்புஸ்தகங்களும் எழுதிவைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யவேண்டிய பொறுப்பு ஒவ்வொரு லோகல்போர்டு பிரசிடெண்டையும் சேர்ந்தது. கணக்குகள் சரிவரவும், சரியாகவும், அந்தந்தக் காரியாலயங்களில் எழுதிவைக்கப்படவேண்டும்.

புஸ்தகங்கள் ஜாபிதா.

1. ரொக்க வரவு செலவுக் கணக்குப்புஸ்தகம்.
2. டெபாசிட்டுகள் ரெஜிஸ்தர்.
3. வசூலாகவேண்டிய அட்வான்ஸ் தொகை கணக்குப் புஸ்தகம்.
4. விற்பனை சாமான்கள் குறிப்பு.
5. வரவு தொகைக் குறிப்பு.
6. தரும சொத்து ரெஜிஸ்தர்.
7. வட்டிக்குப் போடப்பட்டுள்ள முதல் (இன்வெஸ்ட்மெண்ட்) ரெஜிஸ்தர்.
8. இலாகா மார்பில் வசூலிக்கப்படும் வரி வசூல் டிக்கட்டுக் கணக்கு விவரப் புஸ்தகம்.
9. இலாகா மார்பாக கீழ் உத்யோகஸ்தரைக்கொண்டு வசூலிக்கப்படும் தொகை டிக்கட்டுக் கணக்குகள்.
10. ஆக்ரமிப்பு ரெஜிஸ்தர்.
11. சாசுவத அட்வான்ஸ் ரெஜிஸ்தர்.
12. அவசரச் சில்லரைக் குறிப்பு.
13. சம்பளப் பட்டியல்.

14. அனுமதிக்கப்பட்டச் செலவு தொகை ஜாபிதா ரெஜிஸ்தர்.
15. அச்சிடப்பட்டக் காகித ஜாபிதாக் கணக்கு.
16. எஸ்டிமேட்டுகள் ரெஜிஸ்தர்.
17. கிராண்டுகள் மாறுகலைக் குறிக்கும் புஸ்தகம்.
18. ஆயுதங்கள், இயந்திரங்கள், மேஜை, நாற்காலி முதலிய பல சாமான்கள் ஜாபிதா புஸ்தகம்.
19. ஸ்தாவர சொத்துக் கணக்குப் புஸ்தகம்.
20. தபால் புஸ்தகம்.
21. தபால் பில்லைகள் கணக்குப் புஸ்தகம்.

II. உபவிதி (1)-ல் குறிப்பிடப்பட்டுள்ள புஸ்தகங்களுடன்,

(a) ஜில்லா போர்டாபீஸில் பின் வரும் புஸ்தகங்களையும் சரியாக எழுதி வைப்பதற்கான ஏற்பாடுகளை ஜில்லா போர்டு தலைவர் செய்யவேண்டும்.

(1) ஜில்லா போர்டு மாதாந்திரக் கணக்கின் ஆபீஸ் நகல்.

(2) ஜில்லா போர்டிலிருக்கும் எல்லா லோகல் போர்டிலுமுள்ள உத்யோகஸ்தர் சிப்பந்திகளின் பிராவிடெண்டு நிதி ரெஜிஸ்தர்.

(3) பழம் தரும் மரங்களின் கணக்கு விவர நகல்.

(b) ஜில்லா சுகாதார அதிகாரி பின் வரும் கணக்கு விவரங்களைத் தம் காரியாலயங்களில் சரிவர எழுதி வைக்கவேண்டியது.

1. அவசரச் சில்லரைக் குறிப்பு.
2. சம்பளப் பட்டியல்.
3. ஆயுதம், கருவிகள், இயந்திரங்கள், காரியாலய மேஜை, நாற்காலி முதலியவைகளடங்கிய ஜாபிதா.
4 தபால் பில்லை கணக்கு.

2. (1) I-வது விதியில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கு விவரங்கள் யாவும் மாகாண கவர்ன்மெண்டினால் விதிக்கப்படும் வழியில் எழுதப்படவேண்டும்.

(2) மாகாண கவர்ன்மெண்டினால் அங்கீகரிக்கப்படும் அச்சுக்கூடங்களைத் தவிர வேறெங்கும் ஸ்தல ஸ்தாபனங்கள் தங்களுக்குத் தேவையான கணக்குப் புஸ்தகங்களையோ அச்சிட்ட பாரங்களையோ வாங்கக்கூடாது.

III. லோகல் போர்டு காரியாலயத்தில் 1-வது விதியின் (1) வது உபவிதியின் கீழ் வரும் முதல் விதியில் கூறப்பட்டுள்ள ரொக்கக் கணக்குப் புஸ்தகத்தில் எழுதப்படும் கணக்கே அந்தந்த ஸ்தல ஸ்தாபனத்தின் நம்பத்தக்க ரொக்கக் கணக்காகும். அன்றாடம் ஒவ்வொரு ரொக்க வரவு செலவும் உடனுக்குடனே எழுதி வைக்கப்படவேண்டும்.

லோகல் போர்டுகள் குத்தகை விஷயம்.

IV. I-வது விதியின் உபவிதி (1)-ல் வரும் (15)-வது பிரிவில் காணப்படும் சாமான் ஜாபிதாக் கணக்கு லோகல் பிரசிடெண்டினாலோ அல்லது அவரால் நியமிக்கப்படும் அந்த போர்டில் பொறுப்பு வாய்ந்த ஒரு அதிகாரியினாலோ குறைந்தது வருஷமொருமுறையேனும் பரிசோதிக்கப்படவேண்டும்.

பஞ்சாயத்துகளின் விதிகளியற்றும் அதிகாரம்.

பஞ்சாயத்துகளினால் தயாரிக்கப்படும் விதிகளைப் பின் வருமாறு பிரசுரம் செய்ய வேண்டுமென்று கவர்ன்மெண்டு ஒரு விதி செய்திருக்கிறது.

(1) பஞ்சாயத்தினால் செய்யப்படும் விதியோ அல்லது பழையவிதிகளின் மாறுதல்களோ, சட்டத்தின் 204-வது பிரிவில் குறிப்பிட்டுள்ள நோட்டீசுடன்சேர்த்து எழுதப்பட்டு, அவைப் பஞ்சாயத்து காரியாலயத்தில் யாவரும் பார்க்கக்கூடிய இடத்திலும், அந்த ஊரில் யாதேனும் சாவடி இருந்தால் அந்த இடத்திலும், எழுதி ஒட்டப்படவேண்டும். இவ்விதம் ஒட்டப்பட்டிருக்கும் சமாசாரத்தைப்பறையடித்துக் கிராமத்திலிருக்கும் யாவருமறிய ஏற்பாடு செய்து, அந்த நோட்டீவில் காணப்படும் விஷயத்தைக் கவனித்து ஆட்சேபனை சமாதானம் கூறுபவர்கள், குறிப்பிட்ட ஒரு தேதிக்குள் தங்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிவித்தால் அவைப் பஞ்சாயத்தில் கவனிக்கப்படுமென்று பிரசுரம் செய்யவேண்டும். ஆட்சேப சமாதான அபிப்பிராயமறிவிக்க, பிரசுரஞ்செய்த தினத்திலிருந்து 15 நாள் சாவகாசம் கொடுக்கவேண்டும்.

(2) மேற்கூறப்படும் நோட்டீஸ் நகலொன்று அதே சமயத்தில் அந்தத் தாலுகா போர்டுத் தலைவருக்கும் அனுப்பப்பட வேண்டும். இதைப் பெற்றுத் தாலுக்கா போர்டுத் தலைவர் இஷ்டப்பட்டால், தம் காரியாலயத்திலும் யாவரும் கவனிக்குமிடத்தில் ஒட்டிவைக்கலாம்.

கதம்பம்.

ஏழை முனிசிபாலிடி.

ஹாரத்து என்பது ஜெர்மனியிலுள்ள ஓர் சிறிய பட்டிணம். இதிலுள்ள ஜனங்கள் 7000 பேர்கள்; இது ஒரு முனிசிபாலிடி; இங்கு மின்சார விளக்குகள் போடப்பட்டிருக்கின்றன. இந்த விளக்குகள் எரியச் செலவான மின்சாரத்தின் கிரயத்தைக் கொடுக்க முனிசிபாலிடிக்குச் சக்தியில்லை. ஆகையினால் விளக்குகளுக்கு மின்சார விசை சப்ளை செய்துவந்த ஷெம்னிட் எலெக்டிரிக் கம்பெனி மின்சார சப்ளையை நிறுத்திவிட்டது. இதனால் ஊர் முழுவதும் இருட்டாயிருக்கிறது. 1100 ஹாரத்து வாசிகள் வேலையில்லாமல் நிற்கிறார்கள். இக்கால உலகப்போக்கு இவ்விதமுமாவிருக்கிறது!

கல்கத்தா கார்ப்பரேஷன்.

கவி ரவீந்தரனத் தாகூரின் 70-வது வருஷப்பிறப்பைக் கொண்டாடு நிமித்தம் கல்கத்தா கார்ப்பரேஷன் இம்மாதக் கடைசி வாரத்தில் அவருக்கு வங்காளி பாஷையில் ஒரு உபசாரப் பத்திரம் படித்துக்கொடுக்கத் தீர்மானித்திருக்கிறது. கார்ப்பரேஷன் சபை வங்காளி பாஷையில் உபசாரப் பத்திரம் படிக்கத் தீர்மானத்தில் இதுவே முதல் தடவையாகும்.

* * * *

கோச்சி சமஸ்தானத்தில் கிராமப் பஞ்சாயத்துகள் செய்யும் வேலை.

கொச்சி சமஸ்தான கிராமப் பஞ்சாயத்துகளின் பொறுப்பும் நிர்வாகமும் 1104-லிருந்தவாறே இருந்து வந்திருக்கிறது. அவையாவன: (1) மைனர் நீர்ப்பாசன வேலைகளைக் கவனித்து, வாய்க்கால்கள்வெட்டி, மராமத்துகள்செய்து, பராமரித்து, இவை பாயும் நிலங்களுக்குத் தண்ணீர் விடுவதை நிதானித்துச் சரியாகக் கவனித்து வருவது; (2) கிணறு, குளங்கள் வெட்டிச் செப்பனிடுவது; (3) போக்குவரத்துச் சாதனங்களுக் கவசியமான பாதைகள், சந்துகள், கால்வாய்கள், புறம்போக்குகள் முதலியவற்றையும், கால்நடைகளின் மேச்சத்துறைகளையும், கிராம ரிஸர்வ்களையும் ஆக்ரமிக்கப்படாமல் சரியாக ஒதுக்கிக் கவனித்துக்கொள்வதும்; (4) கிராம ரோடுகளைப் போட்டு அவற்றைச் செப்பனிட்டு வைத்துக்கொள்வதும்; (5) ரோட்டோரங்களில் செடி, மரங்கள் வளர்ப்பதும்; (6) தண்ணீர்ப்பந்தல்கள் நடத்துவதும்; (7) கிராமச் சுகாதார சீர்திருத்த வேலையில் கவனம் செலுத்துவதும்; (8) 1088-ம் வருஷ 4-வது ரெகுலேஷன் பிரகாரம் கூட்டுறவு சங்கங்கள் ஏற்படுத்துவதும்; (9) விவசாய அபிவிருத்தி செய்து மிருகப்பிராணி வளர்த்திக்கேற்ற ஏற்பாடுகளைச் செய்து கால்நடை மரணத்தைக் குறைக்க முயற்சிப்பதும்; (10) வாராவதி மதில்கள், பாலங்கள், பிரயாணிகள் இறங்குமிடங்கள் கட்டிச் சரியாகக் கவனித்து வருவதும்; (11) அததன் எல்லைக்குள்ளிருக்கும் கீழ்த்தர ஆரம்பக் கல்விப் பள்ளிக்கூடங்களைப் பார்வையிட்டு கவனித்து வருவதுமாகிய இவ்வேலைகள் பஞ்சாயத்திடம் ஒப்புவிக்கப்பட்டிருந்திருக்கின்றன.

(ஸ்தல சுய ஆட்சிப் பத்திரிகை, அக்டோபர் 1931.)

ஸ்தல ஸ்தாபன அனுபவங்கள்.

மார்க்கெட்டு முதலியன.

பஞ்சாயத்து எல்லைக்குள்ளிருக்கும் மார்க்கெட்டுகளைப் பஞ்சாயத்து மார்க்கெட்டென்றும், வெளியேயுள்ளவற்றைத் தாலுக்கா மார்க்கெட்டென்றும் பர்ஹாம்புரி தாலுக்கா போர்டு பாகுபாடு செய்திருக்கிறது.

* * * *

பஞ்சாயத்து எல்லைக்குள்ளிருக்கும் மார்க்கெட்டுகளில் வசூலான தொகையை அந்தந்த பஞ்சாயத்துகளிடம் கொடுத்துவிட மதனபள்ளி தாலுக்கா போர்டு தீர்மானித்துவிட்டது.

* * * *

ஸ்தல ஸ்தாபன அனுபவங்கள்.

சுரத்கல் மார்கெட்டு பஞ்சாயத்திற்குச் சொந்தமென்று மங்களூர் தாலுக்கா போர்டு தீர்மானித்திருக்கிறது.

* * * *

சேரமாதேவி தாலுக்கா போர்டில் பின் வரும் தீர்மானம் நிறைவேறியிருக்கிறது :—கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் தாலுக்கா போர்டின் ஆதீனத்திற்குட்பட்டுள்ள மார்க்கெட்டுகளைத் தவிர கிராமப் பஞ்சாயத்துகளின் எல்லைக்குள்ளிருக்கும் அம்பா சமுத்திரம் தாலுக்காவைச் சேர்ந்த கள்ளிடைக்குறிச்சி, சேரமாதேவியிலும், நங்கூனேரித் தாலுக்காவைச் சேர்ந்த காளக்காடு, நங்கூனேரி, திருக்கருங்குடியிலுமுள்ள கிராம மார்க்கெட்டுகளும், தாலுக்கா மார்க்கெட்டுகளாகும். இதர மார்க்கெட்டுகளாவன : (1) திசையான்விலை, (2) வள்ளியூர், (3) சிங்கிக்குளம், (4) பணகுடி, (5) ராதாபுரம், (6) வடக்கங்குளம், (7) தெக்குவள்ளியூர், (8) இட்டமொழி, (9) இடையங்குடி.

பின் வரும் உற்சவங்கள் தாலுக்கா போர்டைச் சேர்ந்தன. (1) பாபநாசம் சித்திரை விழா, (2) பாபநாசம் ஆடி அமாவாசை, (3) திருவிடைமருதூர் தைப் பூசம், (4) உவரை ஸெயின்ட் அந்தோனிப் பண்டிகை, (5) பொட்டல்புதூர் கண்டி உற்சவம், (6) வனத்திரம் ஆடி அமாவாசை, (கடைசியாகக் கூறப்படும் (5)ம் (6)-ம் தாலுக்கா போர்டு நிர்வாகத்திற்குட்பட்டுவிட்டன.) அம்பாசமுத்திரம் தாலுக்கா, நங்கூனேரி தாலுக்காக்களிலுள்ள நடை வாசகசாலைகள் தாலுக்கா வாசக சாலைகளாகும்.

* * * *

கிராம அபிவிருத்தி நிதி.

நரசாபுரம் தாலுக்கா போர்டு கிராம அபிவிருத்திநிதியில் சேர்க்க ரூ. 4,000 அனுமதித்திருக்கிறது.

மதுவிலக்கு.

புத்தூர் தாலுக்காவில் கட்டாயமாக மதுவிலக்கு ஏற்பாடுகள் செய்ய உத்தேசித்து சுள்ளியா வட்டத்திலுள்ள 10 கடைகளையும் அடுத்த ஏலத்திற்கு விடாமல் மூடிவிடவேண்டுமென்று தாலுக்கா போர்டு வற்புறுத்திவருகிறது. இவற்றைத் தவிர பின்வரும் கடைகளும் மூடப்படவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. 43 என்மூர், 83 ஸவூர், 93 கதிருடையவர், 97 தொத்தாடை, 98 நெரியா, 99 கல்லூர், 106 சவனல், 116 நெல்லியாட், 131 ஹாலன் ரங்கி, 121 அளந்தாயா.

கல்வி.

நாமக்கல் தாலுக்காவில் எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் அனேகமாகப்போதிய இடமில்லாததனாலும், முகம்மதியர் பள்ளிக்கூடங்களை இதரப் பள்ளிக்கூடங்களுடன் சேர்ப்பதை முகம்மதியர் ஆக்ஷேபிப்பதனாலும், ஆரம்பப் பள்ளிக்கூடங்களைப் பிணைத்துச் சிலவிடங்களில் மாத்திரம் ஒன்றாகவைத்துப் பாடம் சொல்லிக்கொடுக்கும் விஷயம் இவ்வருஷம் யோசிக்கப்பட வேண்டியதில்லையென்று அந்தத் தாலுக்கா போர்டு தீர்மானித்திருக்கிறது.

பிரத்யேக வசூல் அதிகாரிகள்.

புக்கப்பட்டிணம் கிராமப் பஞ்சாயத்து தலைவரின் வேண்டுகோளின் பேரில் பேனுகொண்டா தாலுக்கா போர்டு பின்வரும் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறது, "அனுமதியை எதிர்பார்த்து தலைவர் ரூ. 2,000 கடன் கொடுத்ததை இந்தத்தடவை மாத்திரம் பிரத்யேகவிஷயமாகக் கருதி சபை அங்கீகரிக்கிறது"

பண உதவி.

ராமச்சந்திரபுரம் தாலுக்கா போர்டு பின் வரும் தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிறது. "பஞ்சாயத்துகளுக்கு முன்போல் இனியும் பணஉதவியளிக்க முடியாது. இதுவரையில் செய்யப்பட்டுள்ள வேலைகளுக்கான செலவு தொகைமாத்திரம் தான் இப்பொழுது அனுமதிக்கப்படும்."

*　　*　　*　　*

பஞ்சாயத்து எல்லைக்குள் உள்ள நோயாளிகளுக்கு இலவசமாக வைத்திய உதவி புரிவதற்காக 1930 ம் வருஷத்தில் ஆயுர்வேத வைத்திய டாக்டர் எஸ். டி. சாத்தையாவிற்கு ராமச்சந்திரபுரம் தாலுக்கா போர்டு ரூ. 100 கொடுத்துதவியது.

*　　*　　*　　*

நெல்லூரில் ஸ்ரீ கஸ்தூரிதேவி வித்யாலய பரிபாலனத்திற்காக வெங்கடகிரி தாலுக்கா போர்டு ரூ. 60 கொடுத்துதவியது.

பஞ்சாயத்து-ரத்து.

சூரமங்கலம் பஞ்சாயத்து போர்டு 45-A பிரிவு பிரகாரம் சரியாக வேலை செய்யவில்லையென்று அதை ரத்து செய்வதில் ஆட்சேபனை இல்லையென்று சேலம் தாலுக்கா போர்டு முடிவு செய்திருக்கிறது.

பஞ்சாயத்துகள்.

ஸ்தானங்கள் ஒதுக்க.—ஆதி திராவிடர்களுக்குத் தனியாக ஸ்தானங்கள் ஒதுக்கிவைப்பதை விரும்பவில்லை யென்று ஆர்னே பஞ்சாயத்து யூனியன் தீர்மானம் ஒன்று நிறைவேற்றியிருக்கிறது.

*　　*　　*　　*

"ஆதிதிராவிடர்களுக்காக ஸ்தானங்கள் ஒதுக்கவேண்டியதில்லை" யென்று சிவகங்கை யூனியன் பஞ்சாயத்து அபிப்பிராயப்பட்டிருக்கிறது.

வரிவிலக்கு.

ஆரணி யூனியனில் ஆதிதிராவிடர்கள் பரம ஏழைகளாயிருக்கின்றமையால் அவர்கள் வீட்டுவரி செலுத்தவேண்டியதில்லையென்று விலக்குசெய்வதாக அந்தப் பஞ்சாயத்து முடிவு செய்திருக்கிறது.

*　　*　　*　　*

ஸ்தல ஸ்தாபன முனிஸிபல் சபைகளின் இன்ஸ்பெக்டரின் 1930-ம் வருஷ நவம்பர் மாதத்திய உத்திரவு நம்பர் 239-2-ஐக்கொண்டு பஞ்சாயத்து எல்லைக்குள்ளிருக்கும் விவசாயிகள் தொழில்வரி செலுத்தவேண்டியதில்லையென்று தித்தகுடி யூனியன் பஞ்சாயத்து தீர்மானம் செய்திருக்கிறது.

பொதுஜனத் தலைவர்களுக்குபசாரப்பத்திரம்.

ஸ்ரீமான்கள் நரிமன், ஸென் குப்தா இருவருக்கும் வரவேற்புப் பத்திரம் படித்துக்கொடுக்கப்போவதாக படகாரா யூனியன் பஞ்சாயத்து ஏக மனதாகத் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

ஸ்தல ஸ்தாபன அனுபவங்கள்.

வரி விதித்தல்.

கோபாலசமுத்திரம் யூனியன் பஞ்சாயத்து, அதன் எல்லைக்குள் தொழில் வரி விதிக்கத்தீர்மானித்து அதன் தொகை விகிதத்தையும் நிர்ணயம் செய்திருக்கிறது.

*   *   *   *

புதிய ஸ்தலஸ்தாபனத் திருத்தச் சட்டப்பிரகாரம் தொழில்வரி, வீட்டுவரி இரண்டையும் பஞ்சாயத்து எல்லைக்குள் விதிப்பதென்று மேலமங்கலம் யூனியன் பஞ்சாயத்து தீர்மானித்திருக்கிறது.

சச்சரவுகள்.

ஒளக் யூனியன் பஞ்சாயத்தின் விசேஷக்கூட்டமொன்று 1931 எப்ரல் 30-ம் தேதி நடைபெற்றது. அதில் பின்வரும் விஷயம் யோசிக்கப்பட்டது. கோயில் குண்டலா தாலுக்கா போர்டு தலைவர் இந்தப் பஞ்சாயத்துக்கணக்கு முதலிய புஸ்தகங்களை எடுத்துவந்து தம்முன் பரிசீலனைக்குக் காட்டுமாறு பஞ்சாயத்துத் தலைவருக்குக் கடிதம் எழுதினர். பஞ்சாயத்துத் தலைவர் பஞ்சாயத்து தஸ்தவேஜிக் கணக்குகளைப் பஞ்சாயத்துக் காரியாலயத்தினின்றும் அப்புறப்படுத்த முடியாதென்று கூறிவிட்டாராம். அதன்பேரில் தாலுக்காபோர்டு தலைவர் ஸ்தலஸ்தாபனச் சட்டம் 41, 42 (b) பிரிவுகளையனுசரித்து 220 வது விதிபின்கீழ் யூனியன்பஞ்சாயத்துத் தலைவர்மீது சப்மாஜிஸ்திரேட்டு கோர்ட்டில் பிராதுகொடுத்து நடவடிக்கை ஆரம்பித்திருக்கிறர். இவ்விஷயம் இந்த யூனியன் விசேஷக்கூட்டத்தில் யோசிக்கப்பட்டது. பஞ்சாயத்து எல்லையைவிட்டு வெளியே பஞ்சாயத்துக்கணக்கு முதலியவற்றை எடுத்துச் செல்லப் பஞ்சாயத்துத் தலைவர் மறுத்தது சரியென்றும், தாலுக்காபோர்டுத தலைவர் நடவடிக்கை ஆரம்பித்தது தப்பென்றும், தேர்தல் துவேஷத்தைக்கொண்டு இவ்வாறு அவர் செய்திருப்பதாக அபிப்பிராயப்படுவதாகவும் பஞ்சாயத்தார் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள்.

வடிகால் வசதி.

கவர்ன்மெண்டினால் தயாரிக்கப்பட்டுள்ள ஜல வடிகால் திட்டத்தைத் தங்களூரில் அனுஷ்டானத்திற்குக் கொண்டு வருவதில் சர்வ சம்மதமுற்றிருப்பதாகவும், ஆனால் இதனிமித்தம் ஜனங்களுக்குப் புதியவரி எதுவும் விதிக்க இஷ்டமில்லையென்றும் திருவள்ளூர் யூனியன் பஞ்சாயத்து தீர்மானித்திருக்கிறது.

ரகம் வாரியாகத் தேன் காட்சி.

மத்திய கனடா கண்காட்சியில் அவ்வூர் கவர்ன்மெண்டு, ரகம் வாரியாகத் தேன் கொண்டு வைத்திருந்தது பிரசித்தமாகக் கொண்டாடப்படுகிறது. கவர்ன்மெண்டு மத்திய ஆராய்ச்சிப்பண்ணையில் தேனீ பிரிவில் எடுக்கப்பட்ட தேன்கள் இவை. கவர்ன்மெண்டு விதித்துள்ளத் நிபந்தனைகளுக்கொப்ப தேன், வெள்ளை, பசுமை, (பொன்னிறம்) பழுப்புமஞ்சள், கறுப்பு ரகங்களாகப் பிரித்துவைக்கப்பட்டிருப்பது இதுவே முதல் தடவையாகும். ஒவ்வொரு நிறத்திலும் மூன்று ரகங்கள் தேனிருக்கின்றன.

(1931 செப்டம்பர் கூட்டுறவு மார்க்கெட்டுச் செய்திகள் பத்திரிகை).

அமெரிக்கா யுனைடெட் ஸ்டேட்ஸில் விலை வாசிகள்.

பண்ணைகளில் விளையும் பொருள்களை இவ்வருஷம் மே மாதம் யுத்த காலத்திற்கு முன்னிருந்ததைக்கொண்டு கணக்கெடுத்ததில், சராசரி 100-க்கு 80 விகி

N31.1

தமே விலை உயர்வாயிருந்திருக்கிறது. ஆனால் குடியானவர்கள் வாங்கும் சாமான்களின் விலை விகிதமோ யுத்த காலத்திற்கு முன்னிருந்ததைப்போல் 161% ஆகயிருந்திருக்கிறது. சென்ற 20 வருஷங்களில் ஏற்பட்டுள்ள இந்த விலை உயர்வானது குடியானவர்களுடைய நிலைமைக்குப் பொருத்தமாகக் காணப்படவில்லை. இதிலிருந்து குடியானவர்கள் தங்கள் வருமானத்திற்கு அதிகம் செலவிடவேண்டிய நிர்ப்பந்தமேற்பட்டிருப்பது விளங்கும்.

(கூட்டுறவுப் பத்திரிகை, 1931 செப்டம்பர்.)

வேலையின்மைக்கு மருந்து கூட்டுறவே.

அதிர்ஷ்டத்தின் செல்லங்களாகப் பிறக்கும் குழந்தைகளின் ஏராளமான வருமானத்தைப்பற்றி நாம் கொஞ்ச காலமாக அதிகமாகக் கேள்விப்படுகிறோம். பெத்லகம் எஃகு கம்பெனியைச் சேர்ந்த யூஜின் ஜி. கிரேஸ் என்பவர் 1929-ம் வருஷத்தில் சம்பளமும் போனஸுமாகச் சேர்ந்து 1,623,753 டாலர்கள் வாங்கியுள்ளார். நமக்குத் தெரிந்துள்ள அமெரிக்கா புகையிலை கம்பெனியைச் சேர்ந்த வாஷிங்டன் ஹில் என்பவர் இன்னு மதிகமாகச் சம்பாதிக்கிறார். சென்ற வருஷம் அவர் "எடுத்துக்கொண்டது" 2,283,000 டாலர்களுக்கதிகமாகும். இந்த வருமானங்கள் சம்பாத்தியமாகுமாவென்னும் விஷயத்தை நாம் கவனிக்கவேண்டியதனாவசியம். ஆனால், அவ்வளவு வருமானம் பெறுபவர் எவ்வளவு சாமான் விலைக்கு வாங்கக்கூடுமென்பதே முக்கிய விஷயம்.

"பல் துலக்கும் பிரஷ்கள் விளம்பரத்தைப் படித்துப் பார்த்ததும் மிஸ்டர் கிரேஸ் அவற்றில் அரை டஜன் வாங்கலாமென்று எண்ணக்கூடும். மிஸ்டர் கிரேஸ் வருமான அளவு சம்பளம் வாங்கும் பெத்லஹம் கம்பெனியில் வேலை செய்யும் ஆள்கள் 200 பேர் சேர்ந்து மொத்தம் 200 பிரஷ்கள் வாங்கக்கூடும். மோடார் வண்டி விளம்பரத்தைப் பார்த்த மாத்திரத்தில் மிஸ்டர் ஹில் ஒரு மோட்டார் வாங்கக்கூடும். ஆனால் அவருடைய வருமானத் தொகை 300 பேர்களிடம் பிரித்துக் கொடுக்கப்படின், அந்த அளவு சம்பாத்தியத்தைக்கொண்டு 300 பேரும் ஆளுக்கொரு கார் வீதம் வாங்கக்கூடுமாகையால் விற்பனையாகும் மோட்டார் வண்டிகள் 300 ஆகும்.

(1931-ம் வருஷம் செப்டம்பர் கூட்டுறவு பத்திரிகை.)

இங்கிலாந்தில் இப்பொழுது அனேகமாக ஒவ்வொருவரும் சீமைத் தக்காளி (டொமடோஸ்) சாப்பிடுகிறார்கள்.

ம-ா-ா-ஸ்ரீ ஈ. வ. பி நாராயண செட்டியார் சேலம் ஜில்லா எத்தாப்பூர் பஞ்சாயத்து போர்டு தலைவரா யிருந்தார். அவருக்கு சட்டப்பிரகாரம் நோட்டீஸ் பிறப்பித்து அவர் கூறிய சமாதானங்களைக் கேட்டறிந்த பிறகு கவர்ன்மெண்டு அவரைத் தலைவர் பதவியினின்றும் நீக்கிவிட்டது. இதற்குக் கூறப்பட்டுள்ள காரணங்கள் பின் வருமாறு :—

(1) பஞ்சாயத்து போர்டு கூட்டங்கள் காலக்கிரமத்தில் கூட்டாதது.

(2) பஞ்சாயத்து மெம்பர்களில் ஒருவருக்குக் கூட்டத்தைப்பற்றிய நோட்டீஸ் அனுப்பாமலிருந்தது.

(3) விசேஷக் கூட்டமொன்று கூட்டவேண்டுமென்று சில மெம்பர்கள் கையெழுத்திட்டனுப்பிய வேண்டுகோள் பிரகாரம் நடக்கத்தவறியது.

(4) போர்டு, பணத்தை வரிசெலுத்துவோர் நன்மைக்கான வழியில் செலவிடாதது.

160211